குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திருமதி. T.வாஜிதா தபசும், L.L.M.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம் கரூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27 ஆம் நாள், வெள்ளிக்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.12/2025**

**CNR NO.TNKR10-000339-2024**

தமிழ்நாடு அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்
வெள்ளியனை காவல் நிலையம்,
கா.நி. குற்ற எண்.107/2022 :: குற்றமுறையிடுபவர்

/எதிராக /

மூர்த்தி, த/பெ. பழனி :: எதிரி

| வ. எண். | விளக்கங்கள் | | விவரங்கள் |
|---|---|---|---|
| 1) | காவலர்/காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | : | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>வெள்ளியனை காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண்.107/2022 |
| 2) | எதிரியின் பெயர்/வயது, தந்தை பெயர், முகவரி | : | மூர்த்தி (33/2022),<br>த/பெ. பழனி<br>முகவரி:<br>1/44, ஆதிதிராவிடர் காலனி, சின்னதம்பிபாளையம், மணவாடி கிராமம், கத்தாளப்பட்டி அஞ்சல், கரூர். |
| 3) | குற்றம் நிகழ்வு நாள் | : | 13.04.2022 |
| 4) | முறையிட்ட நாள்<br><br>குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 14.04.2022<br><br>08.05.2025 |
| 5) | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 14.04.2022 |
| 6) | எதிரியை பிணையில் விடப்பட்ட நாள் | : | 21.04.2022 |
| 7) | எதிரியிடம் பி.என்.எஸ். | : | 17.02.2026 |

| | | | |
|---|---|---|---|
| | சட்டம் பிரிவு 263– பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள் | | |
| 8) | வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள் | : | 24.02.2026 |
| 9) | குற்ற வழக்கு பல்வகை மனுக்களின் விவரங்கள் | : | 1. Crl.M.P.No.37/26 வழக்கை சமரசம் செய்து முடித்துக் கொள்ள வேண்டி எதிரி தரப்பால் பிரிவு 359 BNSS ன் படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு 24.02.2026 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.<br>2. M.P.No.1/26 அரசு தரப்பில் கூடுதல் சாட்சியை விசாரணை செய்யவேண்டி அரசு தரப்பால் பிரிவு 348 BNSS ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு 17.03.2026 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. |
| 10) | சாட்சிகள் முதல் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | அ.சா.1 –24.02.2026<br>அ.சா.2 –24.02.2026<br>அ.சா.3 –17.03.2026 |
| 11) | சாட்சிகள் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | அ.சா.1 –24.02.2026<br>அ.சா.2 –24.02.2026<br>அ.சா.3 –17.03.2026 |
| 12) | விசாரணை முடிவுற்ற நாள் | : | 24.03.2026 |
| 13) | எதிரி பி.என்.எஸ். 351(1)(ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள் | : | 24.03.2026 |
| 14) | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி மீது பிரிவுகள் 294(b), 355 இ.த.ச பிரிவு மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 271(1) –வது பிரிவின்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது |
| 15) | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு | : | இணைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. |
| 16) | காலதாமத்திற்கான காரணம் | : | காலதாமதம் இல்லை. |

இவ்வழக்கு 08.05.2025 தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 24.03.2026 ம்தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக கூடுதல் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திருமதி.S.சங்கீதபிரியா அவர்களும், எதிரிக்காக வழக்கறிஞர் திரு.P.சக்திவேல் அவர்களும் முன்னிலையாகியிருந்து வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும் முன்னிடப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

இவ்வழக்கில் கடந்த 13.04.2022ம் தேதி காலை வேலைக்கு செல்வதற்காக கிளம்பிக்கொண்டிருந்த போது காலை 08.30 மணிக்கு அங்கு வந்த எதிரி வாதியின் மாமியாரிடம் நீங்க குளிக்கிற தண்ணீரை ஏன் ரோட்டுல விடுறீங்கனு திட்டியதாகவும், அதனால் வாதி எதிரியிடம் ஏன் இப்படி வயசானவங்கள திட்றீங்கனு கேட்ட போது எதிரி வாதியைப் பார்த்து ஏன்டி தேவடியாபுண்டமவளே என்று பொது இடத்தில் அசிங்கமாக திட்டிக் கொண்டே எதிரி போட்டிருந்த செருப்பை கழற்றி வாதியை பெண் என்றும் பாராமல் அவருக்கு கலங்கம் ஏற்படும் வண்ணம் செருப்பால் வாதியின் தலை மற்றும் கன்னத்தில் மாறி, மாறி அடித்து பிடித்து கீழே தள்ளிவிட்டதில் வாதி அருகில் இருந்த பைப் மேல் விழுந்ததில் வாதிக்கு சொற்பகாயம் ஏற்படுத்திய எதிரியின் செய்கையானது ச/பி.294(b), 355 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படியும் தண்டிக்கத்தக்க குற்றச்செயல் புரிந்துள்ளதாக வெள்ளியனை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண்.107/2022ல் 10.06.2022ம் தேதியிட்ட குற்றப்பத்திரிக்கையினை 16.10.2024 அன்று தாக்கல் செய்துள்ளார்.

**2)** எதிரி மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் ச/பி.294(b), 355 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டன. இந்த வழக்கில் எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், பிரிவு 230 BNSS சட்டத்தின் படி எதிரிக்கு வழங்கப்படவேண்டிய

அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**3)** எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு எதிரியிடம் அவருடைய குற்றங்கள் குறித்து வினவியபோது எதிரி தனது குற்றத்தை மறுத்தார். எதிரி தனது குற்றத்தை மறுக்கவே இருதரப்பும் கேட்கப்பட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் பார்த்தபோது அரசு தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு போதுமான ஆதாரம் இருப்பதாக கருதப்பட்டது. எனவே எதிரியின் செய்கையானது ச/பி.294(b), 355 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரி தான் குற்றவாளி அல்ல என்று கூறினார்.

**4)** அரசுதரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கருப்பு கலரில் சிமெண்ட் கலர் வார் போட்ட walkaroo என்று எழுதப்பட்ட சிலிப்பர் செருப்புகள் இரண்டு அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

i) இவ்வழக்கில் அ.சா.1 சசிகலா தன் சாட்சியத்தில், கடந்த 2 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 7 மணி அளவில் தான் வேலைக்கு செல்வதற்காக கிளம்பி கொண்டிருந்தபோது யாரோ ஒரு நபர் அங்கு வந்து தன்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், தான் ஏன் திட்டுகிறிர்கள் என்று கேட்டதற்கு, அவர் போட்டிருந்த செருப்பை கழற்றி, தன்னை பெண் என்றும் பாராமல் தலை மற்றும் கன்னத்தில் மாறி மாறி அடித்து, கீழே பிடித்து தள்ளியதாகவும், தள்ளியதில் அருகில் இருந்த பைப் மீது தான் விழுந்துவிட்டதாகவும், அதில் தனக்கு சொற்ப காயம் ஏற்பட்டதாகவும், பின்பு தான் கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததாகவும், சந்தேகத்தின்பேரில் தான் வெள்ளியணை போலிசாரிடம் எதிரி மீது புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார்

வாக்குமூலம் தான் கொடுத்ததுதான் என்றும், அந்த புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் அ.சா.2 முத்துசாமி தனது சாட்சியத்தில், தான் சின்னதம்பிபாளையத்தில் குடியிருந்து கட்டிட வேலை பார்த்து வருவதாகவும், அ.சா.1 தனது மனைவி என்றும், கடந்த 2 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 7 மணி அளவில் தான் வேலைக்கு சென்றுவிட்டதாகவும், தான் எந்த சம்பவத்தையும் நேரில் பார்க்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் அ.சா.3 திருமதி.அமுதா, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள், தன் சாட்சியத்தில், வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 14.04.2022ம் தேதி வெள்ளியனை காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.காசிவிஸ்வநாதன் நிலைய அலுவலில் இருந்தபோது கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் இருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து மணவாடி கிராமம், சின்னதம்பிபாளையத்தை சேர்ந்த முத்துசாமி மனைவி சசிகலா என்பவரை விசாரித்து அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பெற்றதாகவும், அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மீது காவல் நிலைய குற்ற எண்.107/2022, ச/பி. 294(b), 355 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அ.சா.ஆ.3 அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியதாகவும், பின்பு காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு அன்றைய தினம் காலை 9 மணிக்கு சென்று சாட்சிகள் நெடுஞ்செழியன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்பு இவ்வழக்கின் சம்பவ இடத்தை குறித்து அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அன்றயை தினம்

காலை 10.15 மணி அளவில் அ.சா.1 ன் வீட்டிற்கு வடபுறமுள்ள நடைபாதையில் கிடந்த கருப்பு கலரில் சிமெண்ட் கலர் walkaro என்று எழுதப்பட்ட சிலிப்பர் செருப்புகள் இரண்டினை அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள அ.சா.பொ.1 வழக்கு சொத்து சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாகும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

2) அ.சா.3 திருமதி.அமுதா, மேலும் தனது சாட்சியத்தில், பின்பு சாட்சிகள் சசிகலா, முத்துசாமி, மதுரைவீரன், சுப்ரமணியன், நெடுஞ்செழியன், மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு இவ்வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை தேடி சென்றதில் அன்றைய தினம் மதியம் 1.30 அளவில் சின்னதம்பிபாளையத்திற்கு தென்புறம் உள்ள தார்ரோட்டில் நின்று கொண்டிருந்த எதிரியை சாட்சிகள் அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரிக்க, அவர் தனது குற்றத்தை ஒப்புகொண்டதால், தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்புவித்து, தகுந்த நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், காயமடைந்த சசிகலா என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் குணசேகரன் என்பவரை விசரித்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவமனையில் அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.8 காயச்சான்றிதழ் பெற்றதாகவும், வழக்கு சொத்தினை அ.சா.ஆ.9 படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 10.06.2022ம் தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கையினை 16.10.2024 அன்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். புலன் விசாரணை அதிகாரி திரு.காசிவிஸ்வநாதன் என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு நன்கு பரிச்சயம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**6)** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து பாரதிய நியாய சன்ஹிதா 351(1)(b)–வது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது, எதிரி அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார். எதிரி தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார். இத்துடன் எதிரி

தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் எவ்வித தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.</u>

இவ்வழக்கில் கடந்த 13.04.2022ம் தேதி காலை வேலைக்கு செல்வதற்காக கிளம்பிக்கொண்டிருந்த போது காலை 08.30 மணிக்கு அங்கு வந்த எதிரி வாதியின் மாமியாரிடம் நீங்க குளிக்கிற தண்ணீரை ஏன் ரோட்டுல விடுறீங்கனு திட்டியதாகவும், அதனால் வாதி எதிரியிடம் ஏன் இப்படி வயசானவங்கள திட்றீங்கனு கேட்ட போது எதிரி வாதியைப் பார்த்து ஏன்டி தேவடியாபுண்டமவளே என்று பொது இடத்தில் அசிங்கமாக திட்டிக் கொண்டே எதிரி போட்டிருந்த செருப்பை கழற்றி வாதியை பெண் என்றும் பாராமல் அவருக்கு கலங்கம் ஏற்படும் வண்ணம் செருப்பால் வாதியின் தலை மற்றும் கன்னத்தில் மாறி, மாறி அடித்து பிடித்து கீழே தள்ளிவிட்டதில் வாதி அருகில் இருந்த பைப் மேல் விழுந்ததில் வாதிக்கு சொற்பகாயம் ஏற்படுத்திய எதிரியின் செய்கையானது ச/பி.294(b), 355 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் படியும் தண்டிக்கத்தக்க குற்றச்செயல் புரிந்துள்ளதாக வெள்ளியனை காவல் நிலைய உதவி ஆய்வாளர் குற்ற எண்.107/2022ல் 10.06.2022ம் தேதியிட்ட குற்றப்பத்திரிக்கையினை 16.10.2024 அன்று தாக்கல் செய்துள்ளார்.

9) இவ்வழக்கில் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவரும், புகார்தாரருமான அ.சா.1 சசிகலா தன் சாட்சியத்தில், கடந்த 2 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 7 மணி அளவில் தான் வேலைக்கு செல்வதற்காக கிளம்பி கொண்டிருந்தபோது அங்கு வந்த எதிரி தன்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், தான் ஏன் திட்டுகிறிர்கள் என்று கேட்டதற்கு, அவர் போட்டிருந்த செருப்பை கழற்றி, தன்னை பெண் என்றும் பாராமல் தலை மற்றும் கன்னத்தில் மாறி மாறி அடித்து, கீழே பிடித்து தள்ளியதாகவும்,

தள்ளியதில் அருகில் இருந்த பைப் மீது தான் விழுந்துவிட்டதாகவும், அதில் தனக்கு சொற்ப காயம் ஏற்பட்டதாகவும், பின்பு தான் கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததாகவும் கூறிவிட்டு தற்போது வந்த நபர் யாரென்று தனக்கு தெரியவில்லை என்றும், சந்தேகத்தின்பேரில் சிகிச்சையில் இருந்தபோது வெள்ளியனை போலீசார் தன்னிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 சசிகலா சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

ii) இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 முத்துசாமி புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் கடந்த 13.04.2022ம் தேதி காலை 08.30 மணியளவில் எதிரி தனது மனைவியை பொது இடத்தில் அசிங்கமாக திட்டியதாகவும், செருப்பை கழற்றி அடித்ததாகவும், கீழே பிடித்து தள்ளி சொற்பகாயத்தை ஏற்படுத்தியதாகவும், அதனால் தனது மனைவி போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

**10)** அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் பிறழ் சாட்சிகளாக பாவிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ததில் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிகொணரப்படவில்லை. ஆகையால், அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரியின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்ததல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11)** மேலும், இவ்வழக்கில் அ.சா.3 திருமதி.அமுதா, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள், தன் சாட்சியத்தில், வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 14.04.2022ம்தேதி வெள்ளியணை காவல்நிலைய காவல் உதவி ஆய்வாளர் திரு.காசிவிஸ்வநாதன் நிலைய அலுவலில் இருந்தபோது கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை புறக்காவல் நிலையத்தில் இருந்து

வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து மணவாடி கிராமம், சின்னதம்பிபாளையத்தை சேர்ந்த முத்துசாமி மனைவி சசிகலா என்பவரை விசாரித்து அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் பெற்றதாகவும், அந்த புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி மீது காவல் நிலைய குற்ற எண்.107/2022, ச/பி. 294(b), 355 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், அ.சா.ஆ.3 அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியதாகவும், பின்பு காவல் உதவி ஆய்வாளர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துகொண்டு அன்றைய தினம் காலை 9 மணிக்கு சென்று சாட்சிகள் நெடுஞ்செழியன் மற்றும் மாரியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்பு இவ்வழக்கின் சம்பவ இடத்தை குறித்து அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அன்றயை தினம் காலை 10.15 மணி அளவில் அ.சா.1 ன் வீட்டிற்கு வடபுறமுள்ள நடைபாதையில் கிடந்த கருப்பு கலரில் சிமெண்ட் கலர் walkaro என்று எழுதப்பட்ட சிலிப்பர் செருப்புகள் இரண்டினை அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியதாகவும், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுள்ள அ.சா.பொ.1 வழக்கு சொத்து சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்டதாகும் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**2**) அ.சா.3 திருமதி.அமுதா, மேலும் தனது சாட்சியத்தில், பின்பு சாட்சிகள் சசிகலா, முத்துசாமி, மதுரைவீரன், சுப்ரமணியன், நெடுஞ்செழியன், மாரியப்பன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு இவ்வழக்கின் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை தேடி சென்றதில் அன்றைய தினம் மதியம் 1.30 அளவில் சின்னதம்பிபாளையத்திற்கு தென்புறம் உள்ள தார்ரோட்டில் நின்று கொண்டிருந்த எதிரியை சாட்சிகள் அடையாளம் காட்ட அவரை பிடித்து விசாரிக்க, அவர் தனது குற்றத்தை ஒப்புகொண்டதால், தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்புவித்து, தகுந்த நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதாகவும், காயமடைந்த சசிகலா என்பவருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் குணசேகரன்

என்பவரை விசரித்து வாக்குமூலம் பதிவு செய்து மருத்துவமனையில் அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.8 காயச்சான்றிதழ் பெற்றதாகவும், வழக்கு சொத்தினை அ.சா.ஆ.9 படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், பின்பு இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 10.06.2022ம் தேதியிட்ட குற்ற இறுதி அறிக்கையினை தாக்கல் செய்துள்ளார். புலன் விசாரணை அதிகாரி திரு.காசிவிஸ்வநாதன் என்பவரின் கையொப்பம் மற்றும் கையெழுத்து தனக்கு நன்கு பரிச்சயம் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**12)** அ.சா.1 சசிகலா புகார் வாக்குமூலத்தில் போலீசார் விசாரணையின்போது கடந்த 2 1/2 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலை 7 மணி அளவில் தான் வேலைக்கு செல்வதற்காக கிளம்பி கொண்டிருந்தபோது யாரோ ஒரு நபர் அங்கு வந்து தன்னை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், தான் ஏன் திட்டுகிறிர்கள் என்று கேட்டதற்கு, அவர் போட்டிருந்த செருப்பை கழற்றி, தன்னை பெண் என்றும் பாராமல் தலை மற்றும் கன்னத்தில் மாறி மாறி அடித்து, கீழே பிடித்து தள்ளியதாகவும், தள்ளியதில் அருகில் இருந்த பைப் மீது தான் விழுந்துவிட்டதாகவும், அதில் தனக்கு சொற்ப காயம் ஏற்பட்டதாகவும், பின்பு தான் கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்ததாகவும், இது சம்பந்தமாக வெள்ளியணை போலிசாரிடம் எதிரி மீது புகார் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லிவிட்டு அதற்கு முற்றிலும் மாறாக தனது நீதிமன்ற விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அதற்கேற்றார்போல், வழக்கு நிலுவையில் இருக்கும்போது புகார்தாரரான அ.சா.1 சசிகலா என்பவரும், இவ்வழக்கின் எதிரியும் சமாதானம் ஆகிவிட்டதாக, கடந்த 24.02.2026ம் தேதி பி.என்.எஸ்.எஸ் 359 பிரிவின் கீழ் சமரச மனு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கில் சில குற்றங்கள் சட்டப்படி சமரசமாக தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

**13)** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 சசிகலா புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை பொறுத்து சாட்சியம் அளிக்காததால் இவ்வழக்கின் மூல ஆதாரமான அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலம் சந்தேகத்திற்கு உள்ளாகுவதாலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 அ.சா.2 சாட்சிகள் அரசு தரப்பு

வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், புலன்விசாரணை அதிகாரி சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரி தான் குற்றம் புரிந்தார் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரியின் மீது ச/பி.294(b), 355 இ.த.ச பிரிவு மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

**14)** முடிவாக, எதிரியின் மீது ச/பி.294(b), 355 இ.த.ச பிரிவு மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழும் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 271(1) –வது பிரிவின்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**15)** இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டு, இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆர்.பி.எண்.14/2022 என்ற எண்ணில் கண்டுள்ள, இவ்வழக்குச் சொத்தான அ.சா.பொ.1 கருப்பு கலரில் சிமெண்ட் கலர் வார் போட்ட walkaroo என்று எழுதப்பட்ட சிலிப்பர் செருப்புகள் இரண்டை மேல்முறையீட்டு காலத்திற்கு பின், அல்லது மேல்முறையீடு எதுவும் நிலுவையில் இருப்பின், அது முடிந்த பின்னர் அழிக்க, பி.என்.எஸ்.எஸ் 498–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரத்தினை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 27.03.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

WAJITHA THABASSM THAJUDHEEN

Digitally signed by WAJITHA THABASSM THAJUDHEEN
Date: 2026.03.30 15:11:53 +0530

**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம்,**
**கரூர்.**

**பின் இணைப்பு**

**அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1. | சசிகலா |
| அ.சா.2 | முத்துசாமி |
| அ.சா.3 | திருமதி.அமுதா, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் |

**அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:–**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகாரில் உள்ள கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேடு |
| அ.சா.ஆ.8 | காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.9 | படிவம் 91 |

**அரசுதரப்பு சான்று பொருள் :–**

ஆர்.பி.எண்.14/2022

அ.சா.பொ.1–கருப்பு கலரில் சிமெண்ட் கலர் வார் போட்ட walkaroo என்று எழுதப்பட்ட சிலிப்பர் செருப்புகள் இரண்டு.

**எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள் :–**

இல்லை

நகல்: மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், கரூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நகல்:நிலைய பொறுப்பு அதிகாரி, வெள்ளியணை காவல் நிலையம்.

**குறிப்பு**

1) எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்துள்ளார்.
2) சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3) வழக்கின் முடிவு காவல் துறையினருக்கும், எதிரிக்கும் தெரிவிக்கப்பட்டது.

WAJITHA THABASSM THAJUDHEEN

Digitally signed by WAJITHA THABASSM THAJUDHEEN
Date: 2026.03.30 15:12:05 +0530

**நீதித்துறை நடுவர்,**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம்**
**கரூர்.**